00001

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்பு கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 06

**SNU6224/ESU4124– கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 02.03.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. பாடசாலைச் சூழலுடன் தொடர்புபட்ட உதாரணமொன்றின் துணையுடன் முகாமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது? எனச் சுருக்கமாக விபரிக்குக.
2. விசேடக் கல்வித் தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு ஏன் கல்வி முகாமைத்துவம் தேவைப்படுகின்றது என விளக்குக.
3. "வினைத்திறன் விளைதிறனுக்கு இட்டுச் செல்லும்" பாடசாலை சூழமைவுடன் தொடர்புபட்ட பொருத்தமான உதாரணமொன்றினை வழங்கி இக்கூற்று பற்றிக் கலந்துரையாடுக.
4. ஹென்றி பயோல் அறிமுகம் செய்துள்ள முதல் **ஐந்து (05)** முகாமைத்துவ செயல்களைப் பட்டியற்படுத்துக.
5. வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதான அபிவிருத்திசார் பொறுப்புக்கள் **ஐந்தினை (05)** இனங்காண்க.
6. பாடசாலை முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட வகையில் ஆசிரியர் ஒருவரின் முகாமைத்துவ பொறுப்புகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.
7. விளைதிறன்மிக்க பாடசாலையொன்றின் பண்புகள் **ஐந்தினைப் (05)** பட்டியற்படுத்துக.
8. விளைதிறன்மிக்க பாடசாலையை நோக்கிய பாடசாலை அதிபர் ஒருவரின் பிரதான பொறுப்புக்கள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

**9. i.** அடிப்படை முகாமைத்துவச் செயன்முறைகள் **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**ii.** முகாமைத்துவச் செயன்முறைகளில் திட்டமிடல் ஏன் மிகவும் முக்கியத்துவம் கொண்டதாக கருதப்படுகின்றது என்பதை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை அதிபர்கள் திட்டமிடல் செயன்முறையின் போது எதிர்நோக்கும் சவால்கள் **இரண்டினை (02)** இனங்கண்டு, அச்சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான அல்லது இழிவளவாக்குவதற்கான நடைமுறை ரீதியான உபாயங்களைப் பரிந்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

10. "F.W.டெய்லர் தனது விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டில் ஒழுங்கமைப்பொன்றின் உற்பத்தி ஆற்றலை உச்சப்படுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்."

i. மேற்படி கோட்பாட்டின்கீழ் ஒழுங்கமைப்பின் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்காக டெய்லர் முன்வைத்துள்ள **நான்கு (04)** தத்துவங்கள் அல்லது அணுகுமுறைகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

ii. ஒரு ஆசிரியர் என்ற வகையில் உங்களுடைய பாடசாலையின் கல்விப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு மேலே குறிப்பிட்ட **இரண்டு (02)** தத்துவங்களை அல்லது அணுகுமுறைகளை எவ்வாறு நீங்கள் நடைமுறைப்படுத்துவீர்கள்? பொருத்தமான **இரண்டு (02)** உதாரணங்களை வழங்கி ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. டெய்லர் ஒழுங்கமைப்பொன்றின் வேலைச் சூழலுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளார். ஒரு ஆசிரியர் என்ற வகையில் மிகவும் உவப்பான கற்றல் சூழலை உருவாக்குவதற்கு நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்?

**(10 புள்ளிகள்)**

11. "அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் மாகாண சபைகளின் உருவாக்கத்திற்கும் பிராந்திய மட்டங்களில் நிருவாகப் பொறுப்புக்களை பரவலாக்கம் செய்வதற்கும் இட்டுச்சென்றது."

i. இலங்கை கல்வி முறைமையின் தற்போதைய கல்வி முகாமைத்துவக் கட்டமைப்பின் **ஐந்து (05)** பணித்துறையாட்சி மட்டங்களையும் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

ii. கல்வி அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. பாடசாலைச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக, மாகாண கல்வித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் **நான்கு (04)** நிருவாக வகிபாகங்களைப் பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. "வகுப்பறைச் சூழலில் மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்தில் ஆசிரியர்கள் பிரதான பங்கினை வகிக்கின்றனர்."

i. ஒரு விசேட கல்வி ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் உங்களுடைய வகுப்பறையினை விளைதிறன்மிக்கதாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்காக, உங்களுடைய பாடசாலை அதிபரிடமிருந்து எதிர்பார்க்கும் **இரண்டு (02)** பிரதான ஒத்துழைப்புக்களை இனங்காண்க.

**(04 புள்ளிகள்)**

ii. விளைதிறன்மிக்க வகுப்பறை முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு விசேடக் கல்வி ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் மேற்கொள்ளக் கூடிய அத்தியாவசியமான பொறுப்புக்கள் **மூன்று (03)** பற்றி சுருக்கமாக விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. நீங்கள் மேலே பகுதி - ii இல் குறிப்பிட்ட பொறுப்புக்களை நிறைவேற்றும் போது எதிர்நோக்கக் கூடிய சவால்கள் **இரண்டினை (02)** இனங்கண்டு அச்சவாலக்ளுக்கு முகங்கொடுப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கான பொருத்தமான உபாயங்களையும் முன்வைக்குக.

**(10 புள்ளிகள்)**

**13.** "அரசாங்கம் கல்வி முகாமைத்துவத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இன்னும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன."

**i.** இலங்கையின் கல்வி முகாமைத்துவ முறைமையில் வளமுகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட **நான்கு** (04) பிரதான பிரச்சினைகளை இனங்காண்க.

**(04 புள்ளிகள்)**

**ii.** மேலே பகுதி -I இல் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** ஒரு ஆசிரியர் என்ற வகையில் இத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீங்கள் எத்தகைய பங்களிப்பினை வழங்கலாம் என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

**14.** "உள்ளக மேற்பார்வையின் பிரதானமானதொரு நோக்கம் கற்பித்தல் கற்றல் செயன்முறையினை முன்னேற்றுவதாகும்."

**i.** உள்ளக மேற்பார்வை எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** உள்ளக மேற்பார்வையின் ஊடாக தங்களது கற்பித்தலை முன்னேற்றிக் கொள்வதற்காக, ஆசிரியர்கள் உள்வாரி மேற்பார்வையினூடாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் **மூன்றினை** (03) பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** அதிபர்கள் உள்ளக மேற்பார்வையினை நடைமுறைப்படுத்தும் போது முகங்கொடுக்கும் சவால்கள் **இரண்டினை** (02) இனங்கண்டு, அச்சவால்களை தீர்ப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு பொருத்தமான தீர்வுகளை பரிந்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*